| | |
|---|---|
| **அனுப்புநர்** | **பெறுநர்** |
| இயக்குநர்,<br>அரசுத் தேர்வுகள் இயக்ககம்,<br>சென்னை - 600 006. | 1. அனைத்து முதன்மைக் கல்விஅலுவலர்கள், மற்றும் இணை இயக்குநர் (கல்வி), புதுச்சேரி.<br>2. அனைத்து மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள். |

**ந.க.எண். 021074 / எச்1 /2023** **நாள் :** 09.01.2024

**ஐயா/அம்மையீர்,**

**பொருள் :** சென்னை-6, அரசுத் தேர்வுகள் இயக்ககம் – 2023-2024-ஆம் கல்வியாண்டிற்கான மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வு – +2 பள்ளி மாணவர்களுக்கான தேர்வுக் கட்டணம் மற்றும் TML கட்டணம் - ஆன்- லைன் வழியாக செலுத்துதல் – சார்பு.

**பார்வை :**

1. அரசாணை எண் 237, பள்ளிக் கல்வி (வி1) துறை, நாள்: 21.09.2007.
2. அரசாணை (நிலை) எண்.68, பிற்படுத்தப்பட்டோர் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் (சிந2) துறை, நாள்:18.11.2021.
3. அரசாணை (நிலை) எண்.48, பள்ளிக் கல்வித் (ஜிஇ1)த் துறை, நாள்.11.04.2002.

*****

2023-2024- ஆம் கல்வியாண்டிற்கான மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வெழுதவுள்ள பள்ளி மாணவர்களிடமிருந்து (தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டவர்களைத் தவிர்த்து) தேர்வுக் கட்டணத் தொகையினை பெற்று, அத்தொகையினை ஆன்லைன் வழியாக பின்வரும் அறிவுரைகளைப் பின்பற்றி 09.01.2024 **அன்று பிற்பகல் முதல்** 29.01.2024 **பிற்பகல்** 5.00 **மணி வரையிலான** நாட்களுக்குள் செலுத்திட, தங்கள் ஆளுகைக்குட்பட்ட அனைத்து மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களுக்கும் அறிவுறுத்துமாறு முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.



www.Padasalai.Net

**<u>தேர்வுக் கட்டணம் (Exam Fees)</u>**

| வ. எண் | மாணவர் வகை | தேர்வுக் கட்டணம் (ஒரு மாணவருக்கு) |
|---|---|---|
| 1 | செய்முறை கொண்ட பாடங்களடங்கிய பாடத் தொகுப்பில் பயில்வோர் | ரூ.225/- |
| 2 | செய்முறை இல்லாத பாடங்களடங்கிய பாடத் தொகுப்பில் பயில்வோர் | ரூ.175/- |

**<u>தேர்வுக் கட்டண விலக்கிற்கு தகுதியானோர்:</u>**

| | |
|---|---|
| 1) | பார்வை1-ல் காணும் அரசாணையின்படி தமிழை பயிற்று மொழியாகக் கொண்டு (Tamil Medium) தேர்வெழுதும் அனைத்து பள்ளி மாணவர்களுக்கும் தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படுகிறது. |
| 2) | கண் பார்வையற்றோர், காது கேளாதோர் மற்றும் வாய் பேசாதோர் ஆகிய மூன்று வகை மாற்றுத் திறனாளி மாணவர்கள் தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படுகிறது. |
| 3) | அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் SC, SCA, SS, ST, MBC/DC இனத்தைச் சேர்ந்த மாணவர்கள் (தமிழ்வழி தவிர இதர பயிற்று மொழிகளில் - Other than Tamil Medium) பயில்பவராக இருந்தாலும் தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படுகிறது. |

www.Padasalai.Net

| | |
|---|---|
| 4) | • பார்வை 2-ல் காணும் அரசாணையின்படி அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் BC, BCM இனத்தில் பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.2.5 இலட்சத்திற்கு (ரூபாய்.2,50,000) குறைவாக உள்ளவர்கள் (தமிழ்வழி தவிர இதர பயிற்று மொழிகளில் - Other than Tamil Medium) தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படுகிறது.<br><br>• **பகுதி அரசு உதவி பெறும் (Partly aided) பள்ளிகளில், சுயநிதி பாடத் தொகுப்பில் பயிலும் மாணவர்களுக்கு மேற்குறிப்பிட்ட (வரிசை எண்.3 மற்றும் 4-ல் குறிப்பிட்டுள்ள) இந்தத் தேர்வுக் கட்டண விலக்குபொருந்தாது.**<br><br>• **பகுதி அரசு உதவி பெறும் (Partially aided) பள்ளிகளில், சுயநிதி பாடத் தொகுப்பில் மாணவர்கள் பயின்று வந்தால் Partially aided என்பதனை Click செய்து Exam Fees செலுத்த வேண்டும்** |

www.Padasalai.Net

<u>முக்கிய குறிப்பு:</u>

❖ தேர்வுக் கட்டண விலக்கிற்கு தகுதியானவர்களில், செய்முறை கொண்ட பாடங்களடங்கிய பாடத் தொகுப்பில் பயில்வோருக்கு மொத்தக் கட்டணமாக ரூ.225/-ற்கும், செய்முறை இல்லாத பாடங்களடங்கிய பாடத் தொகுப்பில் ரூ.175/- ற்கும் முழுமையாக விலக்களிக்கவேண்டும்.

❖ **சுயநிதி / மெட்ரிகுலேஷன் மற்றும் ஆங்கிலோ இந்தியப் பள்ளிகளில் பயின்று +2 பொதுத் தேர்வெழுதும் மாணவர்கள் தேர்வுக் கட்டண விலக்கு பெறத் தகுதியுடையவர்கள் அல்லர்.**

<u>+1 Arrear மாணவர்களுக்கான தேர்வுக் கட்டணம் செலுத்துதல்</u>

பள்ளித் தலைமையாசிரியர்கள், தங்கள் பள்ளியில் +2 பயிலும் பள்ளி மாணவர்கள், மேல்நிலை முதலாம் ஆண்டு தேர்வில் தேர்ச்சி பெறாத பாடங்களுக்கான

தேர்வினை (+1 Arrear Subjects) தற்போது எழுதுவதற்கான தேர்வுக் கட்டணத் தொகையினை சம்பந்தப்பட்ட மாணவர்களிடமிருந்து பெற்று, அத்தொகையினை **09.01.2024 அன்று பிற்பகல் முதல் 29.01.2024 பிற்பகல் 5.00 மணி வரையிலான** நாட்களில் இவ்வலுவலக www.dge.tn.gov.in என்ற இணையதளத்திற்குச் சென்று, ஆன்-லைன் வழியாக செலுத்துதல் வேண்டும்.

**+1 Arrear தேர்வெழுதுவதற்கான கட்டணம்**

ஒவ்வொரு பாடத்திற்கும் ரூ.50/- மற்றும் இதரக் கட்டணம் ரூ. 35/-

(உ-ம்) ஒரு பாடம் ரூ.50 + 35 = 85/-

இரு பாடங்கள் = 135

(ரூ.100 + 35 = 135)

**அட்டவணைப் படுத்தப்பட்ட மதிப்பெண் பட்டியல் கட்டணம் (TML Fees)**

பார்வை 3-ல் காணும் அரசாணையின்படி 2023-2024- ஆம் கல்வியாண்டிற்கான மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத்தேர்வின் தேர்வு முடிவுகள் அடங்கிய அட்டவணைப்படுத்தப்பட்ட மதிப்பெண் பட்டியலை (TML) ஆன்லைன் மூலமாக பதிவிறக்கம் செய்து கொள்வதற்காக, அனைத்துப் பள்ளிகளும் (எந்த ஒரு பள்ளியும் விலக்கு இல்லாமல்) ரூ.300/- செலுத்தவேண்டும்.

**ஆன்லைனில் பள்ளித் தேர்வுக் கட்டணம் மற்றும் அட்டவணைப் படுத்தப்பட்ட மதிப்பெண் பட்டியலுக்கான கட்டணம் செலுத்துவதற்கான வழிமுறைகள்**

| | |
|---|---|
| STEP 1: | www.dge.tn.gov.in |
| STEP 2: | Online Portal for School and Educational Offices |
| STEP 3: | School Login ( School User ID & Password )<br>Dashboard Right Hand Side ( Notification ) |



www.Padasalai.Net

| | |
|---|---|
| **STEP 4 :** | **Payment for HSC XII**<br>**Or**<br>**Payment for +1 Arrear**<br>**Or**<br>**TML Payment for HSC XII** |

ஆன்-லைன் மூலமாக கட்டணங்கள் செலுத்துவது தொடர்பாக ஏற்படும் சந்தேகங்களுக்கு பள்ளித் தலைமை ஆசிரியர்கள் சம்பந்தப்பட்ட மாவட்ட அரசுத் தேர்வுகள் இயக்கக ஒருங்கிணைப்பாளரை (Co-ordinators) தொடர்பு கொள்ளலாம்.

மேற்படி, தங்கள் ஆளுகைக்குட்பட்ட அனைத்து பள்ளித் தலைமையாசிரியர்களையும், 2023-2024 - ஆம் கல்வியாண்டு மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்விற்கான தேர்வுக் கட்டணம் (Exam Fees), அட்டவணைப்படுத்தப்பட்ட மதிப்பெண் பட்டியலுக்கான கட்டணம் (TML Fees) ஆகியவற்றினை ஆன்-லைன் வழியாக செலுத்திட அறிவுறுத்துமாறு அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**ஓம்/-**

**இயக்குநருக்காக**

**<u>நகல்</u>**

1. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள் (இடைநிலை மற்றும் தனியார் பள்ளிகள்)
2. அ3 பிரிவு (அலுவலகம்) – தொடர் நடவடிக்கைக்காக.

www.Padasalai.Net